**Deposition of Witness**
**Additional Subordinate Judge, Tenkasi.**
O.S 233 of 2022
பி.வா.சா.2 பானுமதி

| | |
|---|---|
| Name | : பானுமதி |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 19.06.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 6ம்எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி. நான் என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

(நிரூபண வாக்குமூலம் தாக்கல் ஆவணங்கள் தாக்கல் இல்லை)

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

என் நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். தாவா சொத்து என் பெற்றோர்களுக்கு பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளேன். என் அம்மாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். என் அம்மாவிற்கு எப்படி கிடைத்தது என்றால் என் பாட்டி – தாத்தா கொடுத்தது. என் பாட்டி – தாத்தாவிற்கு சொத்து எப்படி கிடைத்தது என்றால் அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. எந்த ஆண்டு அரசாங்கம் என் பாட்டி – தாத்தாவிற்கு கொடுத்தது என்றால் எனக்கு தெரியாது. நான் பிறப்பதற்கு முன்பே

கொடுத்தது. என் பாட்டி – தாத்தாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இசக்கியம்மாள், கோபால் என இருவர் தான் வாரிசுகள். வேறு யாரும் வாரிசுகள் கிடையாது என்றால் எனக்கு தெரிந்து கிடையாது. கோபால் என்பவர் என் தாய்மாமா என்றால் சரிதான். கோபாலின் மனைவி தான் 1ம் வாதி என்றால் சரிதான். என் பாட்டி –தாத்தா அவர்கள் உயிருடன் இருந்தவரை சொத்தை பொறுத்து வரை ஆவணங்கள் எழுதிக்கொடுக்கவில்லை என்றால்வாய்மொழியாக கொடுத்துள்ளார்கள். எந்த வருடம் வாய்மொழியாக கொடுத்தார்கள் என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. வாய்மொழியாக கொடுக்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் நேரடியாக தெரியாது. பக்கத்தில் இருப்பவர்கள் சொன்னார்கள். அவர் பெயர் தெரியாது. என் தாத்தாவிற்கு இன்னொரு மனைவியான திருமலையம்மாள் 2வது மனைவி ஆவார். என் தாத்தா 2ம்திருமணம் செய்து கொண்டதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இறப்பு சான்று உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2வதுமனைவிக்கு சுப்பையா என்பவர் வாரிசாக இருந்தார் என்றும் மேற்படி சுப்பையாவின் வாரிசுகள் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் எங்களிடம் பங்கு கேட்கிறார்கள். எங்களிடம் பங்கு கேட்டால் சொத்தை பாகம் பிரிக்கவில்லை என்றால் பாகம் பிரிக்கவில்லை. பங்கு கொடுக்க வேண்டும். சுப்பையா என்று வாரிசு எதுவும் கிடையாது என்பதால் அவரை வாரிசுகளாக காட்டுவதற்கு நீதிமன்றத்தில்ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சுப்பையாவிற்கு 4 வாரிசுகள் உள்ளார்கள். சுப்பையாவின் வாரிசுகளை என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்

தாத்தாவிற்கு திருமலையம்மாள் என்பவரை திருமணம் செய்யவில்லை என்பதால் தான் ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்ய வில்லை என்றால் சரியல்ல. 1991ம் ஆண்டு என் தாத்தாவிற்கு எத்தனை செண்டு கொடுத்தார்கள் என்றால் 6 செண்டு கொடுத்தார்கள். என் தாத்தா–பாட்டி பெயரில் 6 செண்டிற்கான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. 6 செண்டிற்கு ஆவணம் இல்லாததால் அதற்குரிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தாத்தாவிற்கு 3 செண்டு என்றும், வாதியின் கணவருக்கும் 1ம்வாதிக்கும் தென்பக்கம் 3 செண்டு இடத்தை அரசாங்கம் இலவசமாக கொடுத்தது என்றால் சரியல்ல. அவர்களுக்கு கொடுத்த இடத்தை எங்களுக்கு உரிமை உள்ளது என உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. 1ம் வாதிக்கு கடையநல்லூர் கிராமத்தில் வேறு ஒரு சொத்து புதுவார்டு வேதகோவில் தெருவில் கொடுத்துள்ளதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் கொடிவழியை தவிர வேறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒ.எஸ்.59/22 வழக்கு யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என் அப்பா மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என் அம்மாவும், என் அப்பாவும் சேர்ந்து கொண்டு 1ம்வாதிக்கு தகப்பனார் வழியிலும், கணவர் வழியிலும் உள்ள சொத்துக்களில் பங்கு கொடுக்காமல் ஏமாற்றியதால் தான் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அம்மா எனக்கும், என் சகோதரிக்கும் எந்த ஆண்டு ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் 2021ம்ஆண்டு எழுதிக்கொடுத்தார். என் அம்மா எனக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தில் அவரது பெற்றோர்களுக்கு கிடைத்த வாரிசு நிலையில் பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளது பொய் என்றால்

சரியல்ல. கோபால் எப்போது இறந்தார் என்றால்தெரியாது. வா.சா.ஆ 2 ஆவணத்திற்கு முன்பே கோபால் இறந்து விட்டார். கோபால் உயிருடன் இருந்த வரை சொத்தை பிரிக்கவில்லை என்றால் சரியல்ல. சொத்து பிரிக்கப்பட்டு விட்டது. நான் சொத்தை பிரித்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. சொத்து பிரித்து கொடுத்ததை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்து தற்போது வரை பிரிக்கவில்லை என்பதால் 3 ல்1 பங்கு வாதிகளுக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. 3 செண்டு ஏற்கனவே கொடுக்கப்பட்டது. நான் சொல்லக்கூடிய 3 செண்டு வாரிசு அடிப்படையில் கொடுக்கவில்லை என்றாலும் அது இலவச பட்டா அடிப்படையில் கிடைக்கபெற்ற தனிசொத்து என்றாலும் சரியல்ல. வாதிகளை ஏமாற்றி மோடிசயாக 2021ம் ஆண்டு ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ஆவணங்கள் பாகம் பிரிக்காமல் எழுதிகொடுத்து செல்லாது என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் எந்த ஆண்டு வீடு கட்டப்பட்டது என்றால் நான் பிறந்ததில் இருந்தே வீடு உள்ளது. அதில் தான் நாங்கள் குடியிருந்து வருகிறோம். நான் பிறந்ததில் இருந்து குடியிருந்து வருகிறேன் என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. கைவசம் உள்ளது. வா.சா.ஆ 2 ஆவணத்தில் சொத்து விபரத்தில் காலிமனை என்று தான் உள்ளது என்றாலும் வீடு உள்ளது என்றும், கதவு நம்பர் உள்ளது என காட்டப்படவில்லை என்றால் சரிதான். நான் வீடு இருப்பதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 3 ஆவணத்தில் காலிமனை என்று தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து வழக்கு தாக்கல் செய்யும் வரை வீடு கிடையாது என்றால் தற்போது வழக்கிற்காக பொய்யாக

வீடு இருப்பதாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் தாத்தாவிற்கு 2 ம் மனைவி இருந்ததாக சொல்வதும் அவருக்கு வாரிசு இருப்பதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு அவர்களுக்குரிய சட்டபடியான பங்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)ஏ.பிஸ்மிதா
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.